**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 278 / 2019**

**பி.வா.சா.1 – முத்துப்பாண்டி** **03.07.2026**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

1ம் பிரதிவாதி கருப்பணனின் வாரிசுகள் 17, 18 பிரதிவாதிகள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எங்களுக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 117/2003 வழக்கில் இந்த 1ம் வாதியின் கணவரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி அசல் வழக்கு 117/2003ல் எனது அப்பாவின் இரண்டாம் தாரத்து வாரிசுகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் அவசிய தரப்பினரை சேர்க்காமல் அசல் வழக்கு எண் 117/2003 ல் பெற்ற தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. மேல்முறையீட்டு வழக்கிலும் அவர்களை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அதுபோல நிறைவேற்று மனு மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணை மனுவிலும் அவர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. கருப்பையா பங்கு வேண்டாம் என்று எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளதை பொறுத்து எழுத்துபூர்வமாக கருப்பையாவிடம் எழுதி வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. இதற்கு முன்னர் நடந்த வழக்கில் கருப்பையா பங்கு வேண்டாம் என சொல்லிவிட்டார் என சொல்லியுள்ளேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது அப்பாவுடன் பிறந்தவர்கள் 5 நபர்கள் என்பதால் தாவா சொத்துக்களை 5 பங்குகளாக பிரிக்கவேண்டும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பூர்வீக சொத்துக்கள் என்பதால் வாதிகளுக்கு 5ல் 1 பாகம் உரிமை உள்ளது

என்றால் சரியல்ல. வாதிகளின் பங்கை ஏமாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை